# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1930/12 - 2015 සැප්තැම්බර් මස 01 වැනි අඟහරුවාදා - 2015.09.01

*1930/12 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006, சனவரி 06 ஆந் திகதிய 1426/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு, அதில் காலத்துக்குக் காலம் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பவற்றுக்கு இணங்க எடுக்கப்பட்ட அல்லது அதன் கீழ் எடுக்கப்பட்டதாகக் கருதப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் கீழே தரப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ரீ. எம். எல். சீ. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2015, பெப்புருவரி 12.

இலங்கை தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பு

1. **நடைமுறைக்கு வரும் திகதி** :

இச்சேவைப் பிரமாணக் குறிப்பு 2013.06.01 ஆந் திகதி நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. **நியமன அதிகாரி தொடர்பான விபரம்** :

2.1 நியமன அதிகாரி - பயிலுநர் தரம், தரம் III, தரம் II மற்றும் தரம் I - தொடர்புடைய அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவர்.
விசேட தரம் - அரசாங்க சேவை ஆணைக்குழு.

3. **சேவை வகுதி/சேவை வகுதிகள்** :

மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம்
மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் - அதி உயர் வகுப்பு

3.1 தரங்கள் : தரம் III
தரம் II
தரம் I
விசேட தரம்

4. **ஒப்படைக்கப்படும் பணிகள் தொடர்பான பொது வரைவிலக்கணம்** : விஞ்ஞானக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட செயன்முறைப் பாடங்களுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுப் பயிற்சியைப் பெற வேண்டிய நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிகளுக்கு உறுதுணையாக அமையும் நிதி, மனித, பௌதிக, பண்ட, தொழில்நுட்பத் தரவுகளையும் வளங்களையும் மேற்பார்வை செய்யும் பணியை செயற்படுத்துதல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய பணிகள் உள்ளிட்ட பல்வகைத் தன்மை கொண்ட அரை உயர் தொழில்சார் தகைமைகளைப் பெறுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் கொண்ட மற்றும் பயிற்சி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் முகாமைத்துவ சேவையாகவுள்ள, பொறியியல், விஞ்ஞான, விவசாய, விலங்கு உற்பத்தி என்பன போன்ற உயர்தொழில்சார் சேவைகளுக்கு உறுதுணையாக அமையும் பணிகளை நிறைவேற்றுகின்ற ஒரு சேவை வகுதியாகும்.

5. **சம்பளம்** :

5.1 சம்பளக் குறியீட்டு இலக்கம் : தரம் III, II, I, - MN 03- 2006 A
விசேட தரம் - MN 07- 2006 A

5.2 சம்பளத் திட்டம் : தரம் III, II, I, - ரூபா 15,005 - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - ரூபா 27,885.
விசேட தரம் - ரூபா 20,030 - 11 x 365 - 18 x 500 - ரூபா 33,045 .

5.3 தர முறைமைக்கான ஆரம்பச் சம்பளப்படிமுறை :

| தரம் | ஆரம்பச் சம்பளப்படிமுறை | ஆரம்பச் சம்பளம் (ரூபா) |
|---|---|---|
| III | 1 | 15,005 |
| II | 12 | 17,485 |
| I | 23 | 21,045 |
| விசேட | 04 | 21,125 |

5.4 பயிலுநர் தரத்திற்கான 06/ 2006 (II) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க கொடுப்பனவு
1 ஆம் வருடம் ரூபா 12,929.00
2 ஆம் வருடம் ரூபா 13,040.00

6. **சேவைக்குரிய பதவிகள்** :

6.1 அனுமதியளிக்கப்பட்ட பதவிப் பெயர்கள், அனுமதியளிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை மற்றும் தரங்கள் : ஒவ்வொரு அமைச்சினதும், திணைக்களத்தினதும் நிறுவனத்தினதும் தலைப்பின் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை தொழில்நுட்ப சேவைக்குரிய பதவிகளாக அனுமதியளிக்கப்பட்ட பதவிகள் இச்சேவைக்குரியவையாக அமையும். ஒவ்வொரு பதவிக்கும் ஒப்படைக்கப்படும் பணிகள் அப்பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

6.2 ஒருங்கிணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கை :

ஒரு தரத்திலிருந்து மற்றொரு தரத்திற்கு தரமுயர்வு வழங்கும் நோக்கத்திற்காக III, II, I ஆகிய அனைத்துத் தரங்களும் ஒருங்கிணைந்த உத்தியோகத்தர் எண்ணிக்கையாகக் கருதப்படும். இதற்குப் புறம்பாக விசேட தரத்திற்கான சேவைத் தேவைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு அனுமதியளிக்கப்பட்ட ஊழியர் தொகையொன்று தனியாகக் காணப்பட முடியும்.

6.3 பதவியின் தன்மை : நிரந்தரமானது ஓய்வூதியம் உரித்துடையது.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

7.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சதவீதம் :

| முறை | சதவீதம் |
|---|---|
| திறந்த | 70% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 30% |
| திறமை | ஏற்புடையதாகமாட்டாது |

**குறிப்பு** : I. III, II, I ஆகிய தரங்களின் ஒருங்கிணைந்த ஊழியர் எண்ணிக்கையிலுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 70 % வெளிவாரியான விண்ணப்பதாரர்களுக்கான திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்பப்படும்.

II. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விகிதத்திற்கான போதிய அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட உள்வாரியான விண்ணப்பதாரர்கள் குறித்த திணைக்களத்தில்/அமைச்சில் காணப்படாதவிடத்து மாத்திரமே எஞ்சிய எண்ணிக்கையை திறந்த போட்டிப் பரீட்சையின் ஊடாக வெளிவாரியான விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்து நிரப்ப முடியும்.

III. வெற்றிடங்கள் எண்ணிக்கை 03 இற்கு குறைந்ததாக இருப்பின் திறந்த முறையின் கீழ் மாத்திரமே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

7.2 திறந்த ஆட்சேர்ப்பு முறை :

7.2.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் :

7.2.1.1 பயிற்சித் தரம் : (இரண்டு வருடப் பயிற்சிக்காலம்).

(அ) கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (உ.த.) பரீட்சையில், துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் அடங்கலாக விஞ்ஞான/கணித/தொழில்நுட்பப் பாடத்துறைக்குரிய மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (ஒவ்வொரு பதவியுடனும் தொடர்புடைய பாடங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்) ;

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிலும் மற்றுமொரு பாடத்திலும் திறமைச் சித்திகள் அடங்கலாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

7.2.1.2 பயிற்சித் தரம் : (ஒரு வருடப் பயிற்சிக்காலம்).

(அ) கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (உ.த.) பரீட்சையில், துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் அடங்கலாக விஞ்ஞான/கணித/தொழில்நுட்பப் பாடத்துறைக்குரிய மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (ஒவ்வொரு பதவியுடனும் தொடர்புடைய பாடங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்) ;

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிலும் மற்றுமொரு பாடத்திலும் திறமைச் சித்திகள் அடங்கலாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழிற் தகைமைகள் :

(i) மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில், பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருத்தல்.
(**உதாரணம்** : தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் சிவில்/இலத்திரனியல் /இயந்திரவியல்) ;

அல்லது

(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில், கட்டட வரைபுக் கலைதொடர்பான ஒரு வருட முழு நேரப் பாடநெறியை சிறப்பாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் கைத்தொழில் தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழ் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் ;

அல்லது

(iv) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு** : (i) III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல், பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும் போது ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரமான III ஆம் தரத்திற்கு முதலில் ஆட்சேர்ப்புச் செய்தல் வேண்டும்.

(ii) III ஆம் தரத்திற்கு தகுதி பெறும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைவிடக் குறைவாக உள்ள சந்தர்ப்பங்களில், எஞ்சியுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பயிற்சித் தரத்திற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் பயிற்சித் தரத்திற்கு உள்வாங்கப்படுவர்.

7.2.1.3 தரம் III (திறந்த)

(அ) கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (உ.த) பரீட்சையில், துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் அடங்கலாக விஞ்ஞான/கணித/தொழில்நுட்பப் பாடத்துறைக்குரிய மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (ஒவ்வொரு பதவியுடனும் தொடர்புடைய பாடங்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்) ;

மற்றும்

(ii) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிலும் மற்றுமொரு பாடத்திலும் திறமைச் சித்திகள் அடங்கலாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழிற் தகைமைகள் :

I. மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

IV. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற இருவருட விவசாய டிப்ளோமா ;

அல்லது

V. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

VI. இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியலாளர் பரீட்சை I ஆம் பகுதியைச் சிறப்பாக பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

VII. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 இற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VIII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமனானது என்று மூன்றாம் நிலை, தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு ஏதேனும் தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**: மேலே 7.2.1.1, 7.2.1.2 அல்லது 7.2.1.3 என்பவற்றில் பதவியுடன் தொடர்புடைய வகையிலும், நிறுவனத்தின் தேவைகளுக்குப் பொருத்தமான வகையிலும், ஒரு தொகுதியை/ தொகுதியொன்றை ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 7.2.1.2 (ஆ) மற்றும் 7.2.1.3 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமைகளில் பதவியுடன் தொடர்புடைய தகைமைகளில் ஒன்றை அல்லது பலவற்றைத் தெரிவு செய்து உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்குதல் வேண்டும்.

7.2.2 உடற் தகைமைகள் :

இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குமுரிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7.2.3 ஏனையவை -

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

II. சிறந்த நடத்தையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

III. ஏதேனும் சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு ஆளும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவராவார் ;

IV. விண்ணப்பதாரர் அனைத்துத் தகைமைகளையும் உரிய வயதெல்லையையும் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே அவர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படுவார்.

7.2.4 வயது -

7.2.4.1 ஆகக் குறைந்த வயதெல்லை : 18 வயதுக்கு குறையாதவராக இருத்தல்.

7.2.4.2 உயர்ந்தபட்ச வயதெல்லை : 30 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்.

7.2.5 ஆட்சேர்ப்பு முறை :

எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையொன்று, சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று என்பவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.2.5.1 எழுத்துப் பரீட்சை :

| பாடங்கள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்கு பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| பாடத்துறை சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 100 | 40% |

(உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் பாடத்திட்டம் குறிப்பிடப்படுதல்)

7.2.5.1.1 நடாத்தும் அதிகாரி -
எழுத்துப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி ஒவ்வொரு ஆட்சேர்ப்பு நடைமுறையிலும் நியமன அதிகாரியினால் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

7.2.5.2 தொழில்சார் பரீட்சை - ஏற்புடையதாகமாட்டாது.

7.2.5.3 சாதாரண நேர்முகப் பரீட்சையை நடாத்துவதன் குறிக்கோள்கள் :-

புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. சோதித்தறிவது மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

7.2.5.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் அதிகாரி -
தொடர்புடைய நியமன அதிகாரி.

7.2.5.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதாக மாட்டாது.

7.2.6 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை :

அரசாங்க வர்த்தமானியில் அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலமும் அல்லது பகிரங்க அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலமும் இணையத்தளத்தில் அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலமும் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

7.3.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் :

7.3.1.1 பயிற்சித் தரம் : (இரண்டு வருடப் பயிற்சிக்காக)

(அ) கல்வித் தகைமைகள் :

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

(ஆ) அனுபவம் :

ஆரம்பநிலை அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகுதியொன்றில் நிரந்தரமானதும் திணைக்களத்துக்குரியதுமான பதவியொன்றுக்குரிய துறையில் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

7.3.1.2 பயிற்சித் தரம் : (ஒரு வருடப் பயிற்சிக்காக) :

(அ) கல்வித் தகைமைகள் :

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

(ஆ) தொழிற் தகைமைகள் :

பதவியுடன் தொடர்புடையதாக 7.2.1.2. (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமையுடன் குறித்த துறையில் 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(இ) அனுபவம் :

ஆரம்பநிலை அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகுதியொன்றில் நிரந்தரமானதும் திணைக்களத்துக்குரியதுமான பதவியொன்றில் தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

7.3.1.3 தரம் III இற்கான (நேரடி ஆட்சேர்ப்பு) :

(அ) கல்வித் தகைமைகள் :

சிங்கள/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் க. பொ. த. (சா. த. ) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

(ஆ) தொழிற் தகைமைகள் :

பதவியுடன் தொடர்புடையதாக 7.2.1.3. (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் தகைமையொன்றைப் பெற்றிருத்தல்.

(இ) அனுபவம் :

ஆரம்பநிலை அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகுதியொன்றில் நிரந்தரமானதும் திணைக்களத்துக்குரியதுமான பதவியொன்றுக்குரிய துறையில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

7.3.2 உடற் தகைமைகள் :

இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7.3.3 ஏனையவை -

I. நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

II. உரிய தினத்திற்கு உடன்முந்தியதாக அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் திணைக்களத்துக்குரியதுமான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 5 வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் அதனை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தலும் வேண்டும்.

III. குறித்த உத்தியோகத்தர் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே அவர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

**7.3.4** ஆட்சேர்ப்பு முறை :

எழுத்துமூலமான போட்டிப் பரீட்சையொன்று, சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று என்பவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.3.4.1 எழுத்துப் பரீட்சை:

| பாடங்கள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 100 | 40% |
| பாடத்துறை சார்ந்த தொழில்நுட்ப பரீட்சை | 100 | 40% |

(உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் பாடத்திட்டம் குறிப்பிடப்படுதல்)

7.3.4.1.1 நடாத்தும் அதிகாரி -
எழுத்துப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி ஒவ்வொரு ஆட்சேர்ப்பு நடைமுறையிலும் நியமன அதிகாரியினால் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

7.3.4.2 தொழில்சார்ந்த பரீட்சை - ஏற்புடையதாகமாட்டாது.

7.3.4.3 சாதாரண நேர்முகப் பரீட்சையை நடாத்துவதன் குறிக்கோள் :-

புள்ளிகள் வழங்கப்படமாது சோதித்தறிவது மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

7.3.4.3.1 சாதாரண நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் அதிகாரி : தொடர்புடைய நியமன அதிகாரி.

7.3.4.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை : ஏற்புடையதாக மாட்டாது.

**7.4** திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் : ஏற்புடையதாகமாட்டாது.

7.5 பயிற்சிக் காலத்தின் இறுதியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் :

(அ) திறந்த முறையின் கீழ் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட முறையீன் கீழ் பயிலுநர் தரத்திற்கு உள்வாங்கப்படும் விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிக் காலப்பகுதியைச் சிறப்பாக பூர்த்தி செய்ததன் பின்னர் குறித்த நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைந்தமையை உறுதிப்படுத்தி வழங்கப்படுகின்ற சான்றிதழைச் சமர்ப்பித்ததன் பின்னர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். (பயிற்சியின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் குறித்த நிறுவனங்களால் வழங்கப்படும். உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் சான்றிதழ் வழங்கும் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்) ;

(ஆ) பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்கள் இருப்பின், அவர்களுக்கு பயிற்சிக் காலத்தை 06 மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியினால் நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படுகின்ற காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் மீளவும் சித்தியடையத் தவறுகின்ற திறந்த முறையின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும் அதேவேளை மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்கள் அவர்களது முன்னைய பதவிகளுக்கு விடுவிக்கப்படுவர் ;

(இ) இரண்டு வருடங்களுக்கு மேல் பயிற்சி தேவைப்படுகின்ற விசேட பதவிகள் ஏதும் இருப்பின் அம்மேலதிகப் பயிற்சிக் காலங்களில் ஒரு வருடத்திற்கு ஒரு சம்பள ஏற்றம் வழங்குவது என்ற அடிப்படையில் பயிற்சியின் இறுதியில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். மேலதிகப் பயிற்சிக் காலப்பகுதி, தரம் II இற்கு தரமுயர்த்தும் போது கவனத்திற் கொள்ளப்படும் ;

(ஈ) மட்டுப்படுத்தப்பட்ட முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்கள், பயிலுநர் தரத்தில் அவர்கள் ஏற்கனவே வகித்த சம்பளத் திட்டத்திலேயே தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். பயிற்சிநெறி முடிவடைந்ததன் பின்னர் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் வரை சம்பளத்துக்கு மேலதிகமாக இலங்கை தொழில்நுட்பச் சேவையின் ஆட்சேர்ப்புத் தரத்தின் ஆரம்பச் சம்பள ஏற்றத்துக்குச் சமமான வருடாந்த கொடுப்பனவு ஒன்று வருடாந்தம் வழங்கப்படும். பயிற்சிக் காலப்பகுதியைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் அலுவலர், அதுவரை அவர் பெற்றுவந்த சம்பளத்தின் உயர்படிமுறையில் வைக்கப்படுவதுடன், கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும். பயிற்சியைத் திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்து பரீட்சையில் சித்தியடைந்ததன் பின்னர் 02.03.2000 ஆந் திகதிய 07/2000 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறான தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க சம்பளங்கள் தீர்மானிக்கப்படும் ;

(உ) நிலைமையினைப் பொறுத்து உரிய அமைச்சு/திணைக்களத்தின் தேவைப்பாட்டின் பேரில் திறந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையின் கீழ் குறித்த பதவி ஒன்றினது பயிற்சித் தரத்திற்குள் உள்ளடக்கப்படும் விண்ணப்பதாரிகளின் பயிற்சிக் காலமானது மாற்றப்பட வேண்டுமெனில் அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒவ்வொரு ஆட்சேர்ப்பு நடைமுயையிலும் அப்பயிற்சிக் காலத்தினை உள்ளடக்குவதற்கும் உரிய நியமன அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

8. **வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் :**

8.1

| வினைத்திறன் தடை தாண்டல் | வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய காலப்பகுதி | வினைத்திறன் தடைதாண்டல் தன்மை எழுத்துப் பரீட்சை/தொழில்சார்ந்த பரீட்சை/சான்றிதழ் |
|---|---|---|
| I ஆவது வினைத்திறன் தடைதாண்டல் | இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டு மூன்று (03) வருடங்கள் | எழுத்துப் பரீட்சை (அட்டவணை 01) |
| II ஆவது வினைத்திறன் தடைதாண்டல் | இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II இற்கு தரமுயர்வு பெற்று மூன்று (03) வருடங்கள் பூர்த்தியடை வதற்கு முன்னர். | எழுத்துப் பரீட்சை (அட்டவணை 02) |
| III ஆவது வினைத்திறன் தடைதாண்டல் | இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்கு தரமுயர்வு பெற்று ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியடை வதற்கு முன்னர் | முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாதப் பயிற்சிநெறி |

8.2 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்படுகின்ற கால இடைவெளி :
ஒரு வருடத்தில் இரண்டு முறை நடாத்தப்படும்.

8.3 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துகின்ற அதிகாரிகள் :

(அ) முதலாம், இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் ;

(ஆ) மூன்றாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையாக அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற மூன்று மாத முகாமைத்துவப் பயிற்சி நெறி அமையும்.

**குறிப்பு** : இச்சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் I இற்குத் தரமுயர்வு பெற்று ஐந்து (05) வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் III ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர்.

9. **மொழித் தேர்ச்சி** :

| மொழி | பெறவேண்டிய புள்ளிகள் |
|---|---|
| அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத ஊடக மொழியொன்றில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தமக்குரிய அரசகரும மொழியில் தகுதிகாண் காலத்தில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதன் நேரெதிர் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| இணைப்பு மொழி | தரம் III இல் 5 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க. பொ. த. (சா./தர.) திறமைச் சித்தி மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

*10.* ***தரமுயர்வு வழங்குதல் :***

*10.1 தரம் III இலிருந்து தரம் II இற்கு தரமுயர்வு வழங்குதல்*

*10.1.1 சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில்*

*10.1.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்.*

I. *நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் ;*

II. *சேவை வகுதியின் தரம் III இல் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தலும் பத்து (10) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும் ;*

III. *அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை தரக்கணிப்புச் செயன்முறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதனைவிட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல்*

IV. *தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு உடன் முந்திய ஐந்து (5) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ;*

V. *மற்றைய அரசகரும மொழியில் உரிய மட்டத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் ;*

VI. *முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.*

*10.1.1.2 தரமுயர்வு வழங்கும் முறை :*

*தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் தரம் II இற்கு தரமுயர்வு வழங்குவதற்காக நியமன அதிகாரியிடம் உரிய படிவத்தின் மூலம் கோரிக்கை விடுக்குமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீசிக்கப்பட்டதன் பின்னர் தகுதிபெறும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்படுவர்.*

*10.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு தரமுயர்வு வழங்குதல்.*

*10.2.1 சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில்*

*10.2.1.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :*

I. *சேவை வகுதியின் தரம் II இல் குறைந்தது பத்து (10) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தலும் பத்து (10) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும் ;*

II. *தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு உடன் முந்திய ஐந்து (5) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ;*

III. *அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை தரக்கணிப்புச் செயன்முறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதனைவிட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருத்தல் ;*

IV. *இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்தில் சித்தியடைந்திருத்தல்.*

*10.2.1.2 தரமுயர்வு வழங்கும் முறை :*

*தகைமைகளைப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் தரம் I இற்கு தரமுயர்வு வழங்குவதற்காக நியமன அதிகாரியிடம் உரிய படிவத்தின் மூலம் கோரிக்கை விடுக்குமிடத்து நியமன அதிகாரியினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் தகுதிபெறும் தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக்கப்படுவர்.*

**குறிப்பு** : சாதாரண மட்டத்திலான செயலாற்றுகையின் அடிப்படையில் தரமுயர்வு வழங்கும் போது உரிய தினத்தில் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடையத் தவறும் உத்தியோகத்தர்களின் தரமுயர்வுத் திகதி வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடையத் தாமதமாகிய காலத்திற்குச் சமனான காலப்பகுதியினால் தாமதிக்கப்படுதல் வேண்டும்.

10.3 விசேட தரத்திற்கான ஆட்சேர்ப்பு :

10.3.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் சதவீதங்கள்

| முறை | சதவீதம் |
|---|---|
| மட்டுப்படுத்தப்பட்ட | 40% |
| சேவைகள் அனுபவம் மற்றும் திறமை | 60% |

**குறிப்பு** : விசேட தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது முன்னைய வருடத்தின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டும்.

I. அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 04 ஆகக் காணப்படுமிடத்து மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 25% ஆகவும் சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 75% ஆகவும் காணப்பட வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 03 ஆகக் காணப்படுமிடத்து மேற்படி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 33.33% ஆகவும் சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தொகை 66.66% ஆகவும் காணப்பட வேண்டும்.

II. விசேட தரத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 3 இற்கு குறைவாக இருப்பின் உத்தியோகத்தர்களின் சேவை அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையில் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுதல் வேண்டும்.

10.3.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்தல்.

10.3.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

I. மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப (MN- 03) சேவை வகுதியின் தரம் I இல் குறைந்தது ஐந்து (5) வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் உரிய ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும் ;

II. தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு உடன் முந்திய ஐந்து (5) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ;

III. மூன்றாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

10.3.2.2 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை :

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதில் சித்தியடைபவர்கள் உரிய ஏனைய தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளதாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சைச் சபையினால் தகைமைகளைச் சோதிக்கும் பரீட்சையொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை ஒழுங்கின் அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் நியமன அதிகாரியினால் விசேட தரத்திற்குத் தரமுயர்வு வழங்கப்படும். (விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அட்டவணை 03).

**குறிப்பு** : I. விசேட தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள், அப்பரீட்சை நடாத்தப்படும் வருடத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாத்திரமே பயன்படுத்துதல் வேண்டும் ;

II. வருடாந்தம் அப்பரீட்சை நடாத்தப்படாதவிடத்து அதற்குப் பின்னரான வருடமொன்றில் நடாத்தப்படும் பரீட்சையின் பெறுபேறுகள் ஒவ்வொரு வருடத்திலும் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பயன்படுத்தப்படும். அதன் போது ஒவ்வொரு வருடத்திலும் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்ட திகதிகளில் தகைமைபெற்ற உத்தியோகத்தர்கள் புள்ளி ஒழுங்கின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். அப்பரீட்சையில் சித்தியடைந்த திகதியே விசேட தரத்திற்குத் தரமுயர்வு வழங்கும் திகதியாக அமைதல் வேண்டும்.

*10.3.3* சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :

*10.3.3.1* பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :

I. மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப சேவை வகுதியின் (MN- *03*) தரம் I இல் ஆறு (06) வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் உரிய ஆறு (06) சம்பள ஏற்றங்களை பெற்றிருத்தலும் ;

II. தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு உடன் முந்திய ஐந்து (5) வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் ;

III. அனுமதியளிக்கப்பட்ட செயலாற்றுகை தரக்கணிப்புச் செயன்முறைக்கு இணங்க தரமுயர்வு வழங்கும் தினத்துக்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதனைவிட உயர்ந்த மட்டத்திலான செயலாற்றுகையை பெற்றிருத்தல் ;

IV. மூன்றாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

*10.3.3.2* ஆட்சேர்ப்புச் செய்யப்படும் முறை :

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற சேவை அனுபவம் மற்றும் திறமைகளுக்குப் புள்ளிகள் வழங்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான ஏனைய தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக நியமன அதிகாரியினால் தகைமைகள் சோதித்து உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறமை ஒழுங்கின் அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் நியமன அதிகாரியினால் விசேட தரத்திற்கான நியமனங்கள் வழங்கப்படும்.

விசேட தரத்திற்கு தரமுயர்வு வழங்குவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை - (அட்டவணை - *04*)

*11.* **பதவிகளுக்கு நியமித்தல்** - தேவையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் உரிய விதத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

*12.* **அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்குப் புறம்பான நிபந்தனைகள்:**

*12.1* தகுதிகாண் கால மற்றும் சேவையில் நிரந்தரமாக்குதல்.

I. திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து அரசகரும மொழித் தேர்ச்சியையும் பூரணப்படுத்தியிருப்பாராயின், அத்துடன் அவர் தகுதிகாண் காலத்தில் தனது பதவிக்குரிய கடமைகளையும் நடத்தையையும் திருப்திகரமான முறையில் பேணி வந்திருப்பாராயின் அவரது தகுதிகாண் காலத்தின் இறுதியில் அவரது பதவி நிரந்தரமாக்கப்படும் ;

II. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதில் கடமைக்கு உட்பட்ட வகையில் நியமிக்கப்படுவர். பதில் கடமைக் காலத்தில் தமது பணிக் கடமைகளையும் நடத்தையையும் திருப்திகரமான முறையில் பேணி வருவார்களாயின் பதில் கடமைக் காலத்தின் இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

12.2 தொழில்சார்ந்த சேவைகளில் வழங்கப்படுகின்ற பதவி உயர்வுகள் :

I. திணைக்களங்களின் உயர் தொழில்சார் சேவைகளின் ஊழியர் எண்ணிக்கையில் குறிப்பிட்டதொரு சதவீதம், இலங்கை தொழில்நுட்பச் சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களிலிருந்து பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்களின் தரமுயர்வுக்காக ஒதுக்கப்படும்.

II. அத்தகைய தரமுயர்வு வழிகள் இல்லாதவிடத்து தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்காகவும் அத்தகைய வழிமுறைகளைப் பரவலாக்குதல் வேண்டும். மேலே 12.2.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்தொழில்சார் சேவைகளுக்குச் சமாந்தரமான திணைக்களத்துக்குரிய பதவியொன்றையேனும் உருவாக்குவதற்கு திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

12.3 அரசாங்கத்தினால் காலத்துக்காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் தேர்ச்சிகளையும் திறமைகளையும் அனைத்து உத்தியோகத்தர்களும் உரியவாறு பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**13. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள பொருட்கோடல்களுக்குப் புறம்பான பொருட்கோடல்கள்.**

I. "வர்த்தமானி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியைக் குறிக்கும்.

II. "சேவைப் பிரமாணக்குறிப்பு" என்பது, இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக்குறிப்பைக் குறிக்கும்.

III. "நடைமுறைக்கு வரும் திகதி" என்பது, இப்பிரமாணக்குறிப்பு நடைமுறைப்படுத்தப்பட ஆரம்பிக்கும் திகதியை குறிக்கும்.

IV. "சேவை" அல்லது, "இ. தொ. சே" என்பது, இலங்கை தொழில்நுட்ப சேவையைக் குறிக்கும்.

V. "பயிலுநர் உத்தியோகத்தர்" என்பது, இப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பயிற்சித் தரத்திலுள்ள ஆட்களைக் குறிக்கும்.

VI. "செயலூக்கமிக்க சேவைக் காலம்" என்பது, தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்று உண்மையிலேயே கடமையில் ஈடுபட்டிருந்த சேவைக் காலத்தைக் குறிக்கும். அரசாங்கத்தினால் அனுமதியளிக்கப்பட்ட பிரசவ விடுமுறைகள் தவிர ஏனைய அனைத்து சம்பளமற்ற லீவு காலங்களும் செயலூக்கமிக்க சேவைக் காலத்தைக் கணிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

**14. உள்வாங்குவதற்கான ஏற்பாடுகள் :**

I. இந்த சேவைகப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையிலுள்ளவர்களுக்கு இது மாத்திரம் ஏற்புடையதாகும். உரிய தினத்தில் 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மூலமும் அதன் நேரெதிர் விளைவான சுற்றறிக்கைகள் மூலமும் வழங்கப்பட்டுள்ள MN -03- 2006 - A சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் அனைவரும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் பின்வருமாறு உள்வாங்கப்படுவர்.

II. ஒவ்வொரு பதவிக்கும் நியமிக்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டு சேவைக் காலம் கணக்கிடப்படும். எவ்வாறாயினும் உள்ளீர்ப்பின் காரணமாக குறித்த ஆளின் சம்பள ஏற்றத் திகதிகளில் மாற்றங்கள் நிகழக்கூடாது. சம்பள ஏற்றத் திகதியாக உள்ளீர்க்கப்படுவதற்கு முன்னர் காணப்பட்ட சம்பள ஏற்றத் திகதியே தொடர்ந்தும் நடைமுறையில் இருத்தல் வேண்டும். மேலும் சம்பள மாற்றத்தின் போது குறித்த ஆள் இறுதியாகப் பெற்று வந்த சம்பளப்படிமுறைக்கு

இணங்கியதாக அமையும் விதத்தில் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் **4.4** ஆம் உறுப்புரைக்கு இணங்க அடுத்த சம்பளப்படிமுறையில் வைக்கப்படக்கூடாது.

**14.1** இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் இலங்கை தொழில்நுட்பச் சேவைக்கு பின்வரும் முறையில் உள்வாங்கப்படுவர்.

14.1.1 சேவையின் தரம் III இற்கு உள்வாங்குதல் :

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு II இல் (ஆ) வகுதியில் உள்ள உத்தியோகத்தர்கள்.

14.1.2 சேவையின் தரம் II இற்கு உள்வாங்குதல் :

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு II இல் (அ) வகுதியில் உள்ள உத்தியோகத்தர்கள்.

14.1.3 சேவையின் தரம் I இற்கு உள்வாங்குதல் :

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு I இல் உள்ள உத்தியோகத்தர்கள்.

14.1.4 சேவையின் விசேட தரத்திற்கு உள்வாங்குதல் :

இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் இலங்கை தொழில்நுட்பச் சேவை விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள்.

15. **இடைக்கால ஏற்பாடுகள்** :

இடைக்கால ஏற்பாடுகள் 2018.06.01 ஆந் திகதி வரை பயன்வலுப்பெறும். இந்த சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியில் தரம் III இற்கும் தரம் II இற்கும் உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்களுக்குத் தரமுயவு வழங்குகின்ற போது 2006.01.06 ஆந் திகதிய 1426/34 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை தொழில்நுட்பச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 7.1 (அ) மற்றும் 7.2 (அ) ஆகிய பிரிவுகளையே அடிப்படையாகக் கொள்ளுதல் வேண்டும். (புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் காணப்பட்ட 2006.01.06 ஆந் திகதிய 1426/34 ஆம் இலக்க இலங்கை தொழில் நுட்பச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே இந்த இடைக்கால ஏற்பாடுகள் ஏற்புடையதாகும். ஏனைய நிபந்தனைகள் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.)

16. **ஏனையவை** :

16. 1 ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட செயலொழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளும் தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளும் ஏற்புடையதாகும்.

16. 2 இந்த சேவைப் பிரமாணக் குறிப்பில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

16.3 இந்த சேவைப் பிரமாணக் குறிப்பின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பிரதிகளுக்கிடையில் சில விடயங்களில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்களப் பிரதி பயன்வலுப்பெறும்.

## அட்டவணை 01

1. **பரீட்சையின் பெயர்** : இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை.

2. **பரீட்சை தொடர்பான விபரங்கள்** : இப்பரீட்சை 02 வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும்.

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலொழுங்கு விதிகள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| நிதிப் பிரமாணங்கள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

3. **பரீட்சையை நடாத்துகின்ற அதிகாரி** :

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம்.

4. **பரீட்சை நடாத்தப்படுகின்ற கால இடைவெளி** :

ஒரு வருடத்தில் இரண்டு முறை நடாத்தப்படும்.

5. **பரீட்சைக்கான பாடத்திட்டம்** :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|
| தாபன விதிக்கோவை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள் | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகள்<br>தாபன விதிக்கோவையின் - VIII, XII, XIII, XIV, XIX, ஆம் அத்தியாயங்கள் |
| நிதிப் பிரமாணங்கள் | 1 ஆம் அத்தியாயம்<br>1 இலிருந்து 68 வரையான நிதிப் பிரமாணங்கள்<br>III ஆம் அத்தியாயம்<br>124 இலிருந்து 147 வரையான நிதிப் பிரமாணங்கள் |

## அட்டவணை 02

1. **பரீட்சையின் பெயர்** : இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் II இலுள்ள உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை.

2. **பரீட்சை தொடர்பான விபரங்கள்** : இப்பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டதாக அமையும்.

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| தாபன விதிக்கோவை | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| நிதிப் பிரமாணங்கள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

3. **பரீட்சையை நடாத்துகின்ற அதிகாரி** :

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம்.

4. **பரீட்சை நடாத்தப்படுகின்ற கால இடைவெளி** :

ஒரு வருடத்தில் இரண்டு முறை நடாத்தப்படும்.

5. **பரீட்சைக்கான பாடத் திட்டம்** :

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத் திட்டம் |
|---|---|
| தாபன விதிக்கோவை | தாபன விதிக்கோவையின் - XV XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆம் அத்தியாயங்கள் |
| நிதிப் பிரமாணங்கள் | VI ஆம் அத்தியாயம்<br>315 இலிருந்து 396 வரையான நிதிப் பிரமாணங்கள்<br>XIII ஆம் அத்தியாயம்<br>685 இலிருந்து 775 வரையான நிதிப் பிரமாணங்கள் |

## அட்டவணை 03

1. **பரீட்சையின் பெயர்** : இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்குத் தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை.

2. **பரீட்சை தொடர்பான விபரங்கள்** :

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| உளச்சார்புப் பரீட்சை | 1 மணித்தியாலங்கள் | 100% | 40% |
| முகாமைத்துவம் | 3 மணித்தியாலங்கள் | 100% | 40% |

3. **பரீட்சையை நடாத்துகின்ற அதிகாரி** :

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம்.

4. **பரீட்சையை நடாத்தப்படுகின்ற கால இடைவெளி** :

தேவையைப் பொறுத்து வருடத்துக்கு ஒருமுறை நடாத்தப்படும்.

5. **பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| முகாமைத்துவம் | I. முகாமைத்துவக் கோட்பாடுகள்<br>II. முகாமைத்துவக் தொழிற்பாடுகள்<br>திட்டமிடல்<br>தீர்மானங்கள் எடுத்தல்<br>தீர்மானங்களை எடுக்கும் செயன்முறை ஒழுங்கமைப்பு<br>பதவி நிலைப்படுத்தல்<br>செயற்படுத்துதல்<br>ஊக்குவிப்புச் செயன்முறை<br>தலைமைத்துவக்கட்டுப்பாடு<br>நிர்வாகக் கொள்கைச் செயன்முறை<br>III. பங்கேற்பு முகாமைத்துவம்<br>IV முகாமைத்துவச் சூழல்<br>V. விடய ஆய்வு |
| உளச்சார்புப் பரீட்சை | தன்னிடம் ஒப்படைக்கப்படும் பணிகளை சாதாரண செயலாற்றுகை மட்டத்துக்கு அதிகமான வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கான அறிவு, திறமை, மனப்பாங்கு என்பவற்றைக் வளர்த்துக் கொண்டுள்ளாரா என்பதையும் அவற்றைப் பயன்படுத்துவதில் அதிக தேர்ச்சியை வெளிப்படுத்துகின்றாரா என்பதையும் அளவிடுவதே இப்பரீட்சையின் குறிக்கோளாகும். |

**அட்டவணை 04**

1. **பரீட்சையின் பெயர்** : இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்குத் தரமுயர்த்துவதற்கான கட்டமைக்கப்பட்ட போட்டிப்பரீட்சை.

2. **நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் துறைகளும் அவற்றுக்கான புள்ளிகளும்**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | அதிகபட்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெற வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| சேவை அனுபவம்<br>உரிய அடிப்படைத் தகைமைகளுக்கு அப்பால் பூர்த்தி செய்துள்ள செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம் | 50 | ஏற்புடையதன்று |
| திறமை<br>(சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்படுகின்ற புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் திறமை தீர்மானிக்கப் படும்). | 45 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

3. **நேர்முகப் பரீட்சையை நடாத்தும் அதிகாரி** : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சைகள் சபை.

4. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்ற காலப்பகுதி தேவைகளைப் பொறுத்து வருடத்திற்கு ஒரு முறை.

9- 349

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.